இஸ்லாமிய இறையியல்

# படைத்தவனும், படைப்பினங்களும்...

முஹிப்புல் இஸ்லாம்

அன்பிற்குரியவர்களே! ஏகத்துவம் எங்கே எப்போது யாரால் எடுத்துக் காட்டப்பட்டாம், கடும் எதிர்பிற்குள்ள ாகும் 'படைத்தவனும்' படைப்பினங்களும் அதற்கு விதிவிளக்காக முடியாது. இஸ்லாமிய நேர்வழி அனைவருக்கும் பொதுவானது இஸ்லாம் மனித சமுதாயம் முழுமைக்கும் பொதுவானதன்றி மனித சமுதாயத்தில் முகப்பெரும்பாலோர் அசத்தியத்தை அன்று அரவனைத்துக்கொண்டு சத்தியத்தை வெறுத்தாம் சரி வெகுண்டெழுந்தாம் சரி அவர்கள் அனைவருக்கும் இஸ்லாம் காட்டும் வழியைச் சென்றடையச் செ ய்வது முஸ்லிம்களின் நீங்கா கடமையாகும். இந்த கடமையிலிருந்து 14 நூற்றாண்டுகளாய் இந்திய முஸ்லிம்கள் நீக்கம் பெற்றிருந்தனர் காரணம்; அல்லாஹ் அருளிய இஸ்லாம், தீன் அசல் வடிவம் இந்திய முஸ்லிம்களை வந்தடையவில்லை என்றாம் அவ்வப்போது, உண்மையை உணர்ந்த மிகச் சிலர்; உரிய முயற்சிகளை மேற்கொள்ள முடியவில்லை என்றாம் தங்களால், இயன்றதை செய்துவிட்டு சென்றுள்ளனர் என்பது சற்று ஆறுதல் அளிக்கிறது.

**கைவரிசையால் உருவான மார்க்கப்பணி** மார்க்கம் என்ற பெயரில் உலாவரும் பல்வேறு மூட சடங்கு, சம்பிரதாயங்கள் அனைத்தும் புரோகித கைவரிசையில் உருவான கலப்படங்களே! உண்மையில் அவைகளுக்கும், இஸ்லாத்திற்கும் எந்த தொடர்புமில்லை. இஸ்லாம் வண்மையாக கண்டித்து தடுத்துள்ள அனாச்சாரங்களும், இறைக்கொள்கைகளும், வணக்க வழிபாடுகளாய் முஸ்லிம்களை விடாமல் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன உண்மை உணராத பெரும்பான்மையாகும் சனிமை, புண்ணியம் என்று அவைகளை தங்கள் வாழ்வோடு இரண்டாகக் கலக்க செய்து, தங்களையும் அறியாமல் தூய இஸ்லாத்தை அப்புறப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இந்திய முஸ்லிம்களின் இஸ்லாத்திற்கெதிரான இந்த கொடூர தாக்குதளின் முதல் பலி என்பதைக் காட்டிம், குன்றுலிடும், குலைசம்பந்தப்பட்டிருப்பது ஏகத்துவம்! ஏக இறைக்கொள்கை என்ற இஸ்லாமிய இறையியல் எந்த அளவு குத்திக் குதறிக் கிழிக்கப்படவேண்டுமோ அதற்கு மேலாகவே சணமாகி விட்டது. இதை விட வேறுவகையில் இஸ்லாமிய இறையியலைக் கேவலப்ப டுத்த முடியாது இந்த புண்ணியத்தை இந்திய முஸ்லிம்கள் அள்ளிக்கொட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**பிரமிக்க தக்க விழிப்புணர்வு** வல்ல அல்லாஹ்வின் பேரருள், 1980களில் அரபு நாடுகளில் வாழ்ந்த சில தமிழ் முஸ்லிம்கிலன் முயற்சி, உலகம் முழுதும் வாழும் தமிழ் முஸ்லிம்களிடையே பிரமிக்கதக்க மார்க்க விழிப்புணர்வு ஏற்பட்டு வந்தது. அதே நேரத்தில், பிரச்சாரகர்களிடையே எழுந்த பொறாமை உணர்வு, உலக ஆதாயம், பணம், பட்டம், பதவி இத்யாதி, இத்யாதிகளுக்காக போட்டா போட்டி போட்டுக் கொண் டு பிரிந்தார்கள். பிரிந்தவர்கள் எதில் ஒன்று பட்டார்கள்? பிரிந்தவர்கள் அனைவரும் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் ஒன்றுபட்டார்கள். அதுதான் தனித்தனி இயக்கங்கள் அமைப்புகள், கழகங்கள் காண்பதில் ஒருமித்தனர் தங்கள் தங்களுக்கென்று ரசிகர் மன்றங்களை உருவாக்கிக்கொண்டனர். பிரிந்தவர்கள் தங்கள் ஆதரவாளர்களைத் தக்க வைத்துக்கொள்ள தனித்தனியே இதழ்கள், பதிப்பகம் என்று தங்கள் பங்கிற்கு முன்னரே பிரிந்து கிடக்கும் முஸ்லிம்களை தவ்ஹீதின் பெயரால் கூறு போட்டுக் கொண் டிருக்கிறார்கள். அல்குர்ஆன் கூறும் 25 நபிமார்களும் ஏகத்துவத்தின் பெயரால், இணை வைப்பவர்களாய், இறை நிராகரிப்பவர்களாய் இறை மறுப்பவர்களாய், ஒழுக்கன் கேட்டில் கொத்திருந்தவர்களையெல்லாம் ஒன்றுபட்ட சமுதாயத்தின் அங்கங்கலாய் மாற்றினார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

நான்கு கூறுபோடுபவர்கள் சுயலாபங்களையும் இம்மை காரியங்களையும் நிறைவாகவே அனுபவித்து வருகிறார்கள். குறைவானவர்கள் இன்னல்களை எதிர் கொண்டிருக்கிறார்கள்.
விளம்பரத் தவ்ஹீத்வாதிகள் ஆனால் இன்றைய விளம்பரத் தவ்ஹீத்வாதிகள் 4 தவ்ஹீதின் பெயரால், முஸ்லிம்களை ஒன்றுபடுத்த முயலாமல் விட்டாம் பாத்தியமில்லை. மாறாக தங்களை தங்களே கூறுபோட்டுக்

கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்களை மட்டுமின்றி மனித சமுதாயத்தை ஒன்றினைக்கும் ஒரே கொள்கை இறையருளிய ஓரிறைக் கொள்கை! தமிழக தவ்ஹீத்வாதிகள், ஓரிறைக்கொள்கையின் பெயரால் முஸ்லிம்களையும், தங்களை தாங்களே பிரித்துக் கொள்கிறார்கள் என்றால் தவ்ஹீத்வாதிகளே இன்னும் ஓரிறைக்கொள்கையை முறையாக புரிந்து கொள்ளவில்லை என்பது புலனாகிறது. இன்று பிரிந்து நிற்பவர்கள், துவக்கத்தில் ஒருங்கிணைந்து தவ்ஹீதை மக்கள் சிந்தனைக்கு கொண்டு சென்ற போது ஏற்பட்ட விழிப்புணற்வு பிரிய, பிரிய அருகி வந்து மீண்டும் சூஃபியிஸ ஆதரவாளர்கள் தலைதூக்க ஆரம்பித்துள்ளனர். சூஃபிஸிஸம் சூஃபிகள் கண்ட கடவுள் தத்துவம் படிப்பவர் கேட்பவர்களைச் சொக்க வைக்கும் புரியாத புதிர் மொழியாகும்.

**சூஃபிக் கடவுட் கொள்கை!**

சூஃபிகள் உருவாக்கியது ஏகத்துவமல்ல சூஃபியர்கள் மனிதர்கள் மனிதர்கள் எத்தனை உயர்ந்தாம் மனிதர்களே! மனித தன்மையிலிருந்து மாறதவர்கள்.

சூஃபியர்களானாம் சரி அதை விட கூடுதலாய் கறைகண்டவர்களானாம் சரி. மனிதர்கள் கற்பனை செய்வது இறைகொள்கையல்ல. மாறாது அவை அனைத்தும் வழிகேடுகளே!

1. எந்த மனிதன் உருவாக்கினாம் அது முழுக்க கற்பனை அதில் சில உண்மைகளும் இடம் பெற்றிருக்கும் தமிழ்நாட்டு சித்தர்களும், ஞானிகளும் கண்ட கடவுள் தத்துவம் எல்லாம் ஒன்று இதற்கோர் சிறந்த எடுத்துக்காட்டு.

2. கிரேக்கர்கள் கண்ட கடவுள் தத்துவத்தின் இறுதி முடியும் "எல்லாம் ஒன்று" (இறைவனும், இறைவனால் படைக்கப்பட்ட அனைத்தும் ஒன்றே!) இந்த கிரேக்க கடவுள் தத்துவம்தான் சூஃபிசியத்தின் அடிப்படை.

3. கிரேக்க கடவுள் தத்துவம் அரபு மொழிக்கும் முஸ்லிம் அறிஞர்களால் மாற்றம் செய்யப்பட்ட போது அதற்கு பூசப்பட்ட இஸ்லாமிய அதிகாரமே சூஃபியிஸமாய் உருவெடுத்தது. இஸ்லாத்தின் இறைக்கொள்கையும் ஆங்காங்கே அள்ளித் தெளிக்கப்பட்டிருக்கும் இதைக்கண்டு, இஸ்லாமிய இறையியலை சரியாகப் புரியாத முஸ்லிம் பிரபல்யங்கள், இஸ்லாமிய இறைக்கொள்கையை, சூஃபிகள் கண்ட கடவுட் கொள்கையுடன் இணைத்துப் பார்ப்பதில் இன்பம் காணுகின்றனர்.

பொதுவாக, மனிதர்கள் கண்ட கடவுள் தத்துவங்களில் சில நேரங்களில் உண்மை ஓரிறைக்கொள்கையின் சாயல் எங்காவது இழையோடுவதும் கண்கூடு.

**மனித கற்பனைகள் இரண்டறக்கலக்கும் போது**

"ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" என்ற திருமூலர்

கண்ட தமிழ்கடவுள் கொள்கையில் ஓரிறைக் கொள்கையின் சாயல் ஒளிந்து கொண்டிருப்பதிலிருந்து, திருமந்திரத்தில் இடம் பெறும் 3045 பாடங்களும் திருமூலரின் அனுபவ வெளிப்பாடே! மனித அனுபவத்தால் உணரக்கூடியதன்று ஓரிறைக் கொள்கை! அதனால்தான் மேற்கண்ட வரிக்குப் பின்வரும் மற்ற பாடல்வரிகளும் ஒருவனே தேவன் என்பதைத் தகர்த்தெறிகின்றன.

ஓரிறைக் கொள்கை, மனிதர்களை ஒரே சமுதாய மார்க்கம் ஒப்பற்றக் கொள்கை என்பதை "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" (திருமந்திரம் 2104) என்ற திருமூலரின் இந்த வரி இஸ்லாமிய ஓரிறைக் கொள்கையை அப்படியே பிரதிபலிக்கிறது. இது இந்த மண்ணிம் ஏகத்துவத்தை, ஏகவல்ல அல்லாஹ் ஒலிக்க செய்துள்ளான் என்பதை உணர்த்துகிறது.

அதே நேரத்தில் மற் மிகப்பெரும்பாலான பாடல்களில் திருமூலர் தன் கை வரிசையைக் காட்டியுள்ளார். அந்த பாடல்களில் ஓரிறைக்கொள்கைக்கு அவரே சமாதிகட்டி விட்டார்.

ஒழிந்தேன் பிறவி உறவென்னும் பாசம்
கழிந்தேன் கடவுளும் நானும் ஒன்றானேன்
அழிந்தாங்கு ... கண்டேன்.
(திருமந்திரம் 2958)

"கடவுளும் நானும் ஒன்றாகி விட்டோம் என்பது ஓரிறைக் கொள்கையை இணைவைத்தலாக்கும் இறை மன்னிப்பில்லா மாபதகம்!

**தலைவிரித்தாடும் இணைவைத்தல்**

உண்மை ஓரிறைக் கொள்கையை மனிதக் கற்பனைகளோடு இரண்டறக் கலக்கும் போது அங்கே இணைவைத்தல் தலைவிரித்தாடுவதை எவராம் தடுக்க முடியாது. இப்படி, அறிஞர்கள் புரோகித பண்டிதர்கள், புலவர்கள் கவிஞர்கள், ஞானிகள், சூஃபிகள் என்று இறைவனை எடுத்துக்காட்ட வந்தவர்கள்

குடம் விஷத்துள் சில சொட்டு பாலைச் சொட்டியுள்ளனர். குடம் விஷயத்தில் சொட்டப்டும் சில சொட்டு என்னவாகும் என்பதை சொல்லித்தான் தெரியவேண்டுமா?

தமிழ் சித்தர்களில் தலையாயவராய் போற்றப்படும் திருமூலரின் அடியோற்றி, எல்லா சித்தர்களும், ஞானிகளும் தங்கள் பாடங்களில் சிலவற்றில் ஓரிறைக் கொள்கையைச் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளனர். அதே நேரத்தில் மற்ற பாடல்கள். அனைத்திம் அல்லது பெரும்பாலானவற்றில் இணைவைத்தலை செவை சித்தார்த்தமாய் போதித்துள்ளனர்.

படைத்தவனும் படைப்பினங்களும் ஒன்று என்பதை இறைவனோடு மனிதர்களும் இரண்டறக் கலக்கும் மாபதகத்தை இணை வைத்தலை தமிழ் சித்தர்கள் சைவ சித்தாந்தம் என்ற கடவுட் கொள்கையாக அரங்கேற்றி வந்துள்ளனர். இதிலிருந்து முஸ்லிம் சித்ர்களும் விடுபட முடியவில்லை. மற்ற சித்தர்களைக் காட்டிம், முஸ்லிம் சித்தர்களிடம் ஓரிறைக் கொள்கையின் சாயல் சற்று கூடுதலாய் பிரதிபலிக்கப்பட்டிருக்கும். அவ்வளவே! மற்ற சித்தர்கள் போல் முஸ்லிம் சித்தர்களும் சைவ சித்தாந்தத்தை இறை கொள்கையாக ஏற்றிப் போற்றி போதித்து வந்துள்ளனர்.

**ஏனிந்த கடும் கண்டனம்?**

வீரப்பாயும், குணங்குடி மஸ்தானும், தமிழ்நாட்டு சித்தர்கள் முஸ்லிம்களாய் இருப்பதால் சூஃபிகள் என்று தமிழ் முஸ்லிம்கள் பெருமைபட்டுக் கொள்ளும் இறையருளிய ஏகத்துவத்தை தகர்த்து விட்டனர் என்ற உண்மையை மறைத்திடவும் முடியாது. இவர்கள் கற்பனையில் கண்ட கடவுட் கொள்கை மனித சமுதாயத்தை வழிகேட்டிற்விட்டு செல்வதால் அதை கடும் தரும் விமர்சனத்திற்குள்ளாக்கும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதே வேளை ஏகத்துவத்துவத்திற்கு வேட்டு வைத்துள்ளனர். அதனால் அவர்கள் கருத்துக்கள் கடும் விமர்சனத்துள்ளாகும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சித்தர்களாயிருந்தாம் சூஃபிகளாயிருந்தாம் அவர்களும் மனிதர்களே! மனிதக் கருத்துக்களில் கொள்ளத்தக்கதும் உண்டு. தள்ளதிதக்கதும் உண்டு.
நபி(ஸல்) அவர்கலின் சுய அபிப்ராயங்கள் சில நேரங்களில் தள்ளப்பட்டுள்ளன. இது அல்குர்ஆனின் பல்வேறு இடங்களில் பதிவாகியுள்ளது என்றால் மற்றவர்கள் அபிப்ராயங்கள் எம்மாத்திரம்?
பீரப்பா, மஸ்தான் சாஹிபு போன்றவர்களின் கருத்துக்கள் அல்குர்ஆனுக்கும் அறிவிப்பாளர்களின் நம்பாற் தன்மை ஊர்ஜிதம் செய்யப்பட்ட நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டுதக்கும் உட்பட்டிருத்தாய் அவைகள் கொள்ளத்தக்கவைகளே! மாறுபட்டிருக்கும் தாங்கள் நிச்சயம் அவை விமர்சனத்திற்குட்படுத்தபட வேண்டியவை!

இறைக் கொள்கையைப்பற்றி ஏதுவும் அறியாத அப்பாவி முஸ்லிம்களும் இப்புலவர்களைத் தூக்கோதூக்கொன்று தூக்கிக்கொண்டிருக்கிறார்கள்.
தமிழ் திறனுக்காக பாராட்டப்படும் அந்த முஸ்லிம் புலவர்கள் இறையருளிய ஏகத்துவத்தை இறைக்கிணையாக்கும் மாபாதகமாய் மாற்றிச் சென்றுள்ளதை அந்த ஏகவல்ல அல்லாஹ் எப்படி மன்னிப்பான்? இதுவரை முஸ்லிம்களின் சாதாரண சாமான்யர்கள் ஏதுமறியாத அப்பாவிகளாய் இருந்தனர். இன்று வல்ல அல்லாஹ் அந்த நிலையைத் தன் பிரத்தேயக அருளால் மாற்றி வருகிறான். அல்ஹம்துலில்லாஹ்!

தமிழ் நன்றாக படிக்கத் தெரிந்த 6ம் வகுப்பு மாணவன் அல்குர்ஆன் தமிழாக்கங்களைப் படிக்கத் துவங்கும் ஒரு இனிய சூழல் உருவாக்கியுள்ளது. அல்ஹம்துலில்லாஹ். அல்குர்ஆனின் அபூர்வ எளிமை கருத்துக்களை நேரிடையாக நெற்றில் பொட்டில் அறைந்தால் போல் எடுத்துச் சொல்ம் தெரிந்த பாங்கு அதிங் குறிப்பாய் ஏக இறைக்கொள்கையை அல்குர்ஆன் விரிவாகவும், தெளிவுபடுத்துவதாகவும் எடுத்துக்காட்டி சிந்திக்கத் தூண்டும்போது அந்த இளம் பிராயத்திலே ஓர் இன்ப அதிர்ச்சி ஏற்படும். சாதாரண மனித நூல்களில் ஒருகருத்துக்கு விளக்கம் கண்ட வழக்கம் அல்குர்ஆனில் அப்படி விளக்கம் கிடைக்கவில்லையே என்று ஏமாற வைக்கும். அதனால் சில நேரங்களில் சோர்வு ஏற்படும் என்றாம் இறைவாக்குகளால் ஈர்க்கப்பட்டவர்களுக்கு அந்த சோர்வு ஒரு பொருட்டல்ல.

மீண்டும் அல்குர்ஆனை உற்சாகத்துடன் படிக்க முற்படும் போது பல பக்கங்கள் தாண்டிய பின், வியப்பான அனுபவம் ஏற்படும். நாம், முன்னர் தேடிய விளக்கம் அங்கே இடம் பெற்றிருக்கும் அது நம்மை மேம், மேம்

இன்ப அதிர்ச்சிக்குள்ளாக்கும். மனித நூல்களில் காணப்படும் முரண்பாடுகள் முற்றாக இடம் பெறாத இறைவேத தனித்தனியை இங்குதான் நிரூபணமாகிறது. ஓரிடத்தில் கண்ட கருத்திற்கு வேரிடத்தில் விள க்கமும் தெளிவும் கிடைக்கும். இந்த அனுபவத்தை மனித நூல்கள் எதிம் பெறமுடியாது. பக்கக் கணக்கில் எழுதிபுரிய வைக்க முடியாது என்று மனிதர்கள் மலைக்கும் கருத்துகளுக்கெல்லாம் மிகவும் இனிய, எளிய தெளிவான விளக்கங்கள் அல்குர்ஆனுக்கு அணி சேர்த்துக் கொண்டிருக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்.

தமிழ் தொண்டு என்ற பெயரில் தமிழரின் கடவுள் சித்தாந்தத்தை பூங்காய்கச் குற்குல மாறுதல்களுடன் அப்பட்டமாய் அப்படியே சூஃபியிஸமாக்கிக் கொள்வது இறையருளிய ஓரிறைக்கொள்கைக்கு எதிரானதன்றோ! அதனால்தான், சூஃபியிஸம் கடும் கண்டனத்திற்கும், விமர்சனத்திற்கும் உள்ளாக்கப்ப டுகிறது. முஸ்லிம் தமிழ்த் தொண்டர்களே! முஸ்லிம் தமிழ் ஆர்வலர்களே! மனித கற்பனைக்கு மனித அறிவிற்கு மனித உணர்விற்கு அப்பாற்பட்ட ஏக வல்ல இறைவனைப் பற்றி மனிதர்கள் கற்பிப்பது இறைக்கோட்பாடு போன்ற தோற்றமளிக்கலாம். ஆனால் உண்மையில் அவைகள் கோட்பாடுகள் அல்ல. வழிகேடுகளே! உருவாக்கியவர்களே மட்டுமின்றி ஏற்போரையும், எடுத்து நடப்போரையும் வழிகேட்டின் விளிம்பிற்கே கொண்டு சென்று விடும். அதனால்தான் இஸ்லாமிய இறையியலில் மனித குறுக்கீடுகள் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன. அதையும் மீறி ஷைத்தான்களாம், மற்ற படைப்பினங்களாம் இறைக்கொள்கை சீண்டப்படும் போது அதற்கு அந்த ஏக வல்ல இறைவனே தனது நபிமார்கள் மூலம் பதிலடி கொடுத்துள்ளான். இறைக்கொள்கையில் குளறுபடி ஏற்படாமல் தடுக்கும் முன்னெச்செரிக்கைகளை அல்குர்ஆன் நெடுகிம் காண முடிகிறது.

அல்குர்ஆன் மொழியாக்கங்களைப் பார்க்கும் வாய்ப்பு மஸ்லதான் சாஹிபு, ஒரப்பா போன்றோருக்கு கிடைத்திருந்தால். இறையருளிய ஏகத்துவத்தை இன்றைய சிந்தனையாளர்களைக் காட்டிம் இன்னும் சிறப்பாக எடுத்துக்காட்டிருப்பார்கள். அத்துடன் அத்வைதவாதிகளுக்கும் சரியான சாட்டையடி கொ டுத்திருப்பர். அறிவிப்பாளர்கள் நம்பகத்தன்மை ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஆதாரப்பூர்வ அல்ஹதீதுகள் நமக்கே இப்போதுதான் தமிழில் கிடைக்கத் துவங்கியுள்ளன. அதனால் அவைகளை எடுத்துக்காட்டும் இறையருளிய ஏகத்துவம் அவர்கள் சிந்தனைக்கு கொண்டுவரப்படவில்லை. அதனால் அன்றைய முஸ்லிம்களின் தவறான இறைக்கொள்கையையும், அவர்கள் தமிழ் புலமையும், ஓரிறைக் கொள்கையின் சாயல்களை ஆங்காங்கே வெளிப்படுத்தும் சித்தப்பாடல்களிம் தங்கள் மனதைப் பறிக்கொடுத்தனர். இதன் விளைவு முஸ்லிம் பெயர்களில் பலர் தமிழ் சித்தர்களின் சைவ சிந்தாந்தத்திற்கு இஸ்லாமியச் சாயம் அடித்தனர். சாயம் வெளுக்காதிருக்க சூஃபியிஸ(ம்) போர்வை மிகத் தந்திரமாய் போர்த்தப்பட்டுள்ளது. சூஃபியிஸம் என்று பெயர்சூட்டி, அத்வைதத்தை இஸ்லாத்தின் இறைக் கோட்பாடாகச் சித்தரிக்க முறப்பட்டனர். முஸ்லிம்களில் தமிழார்வம் மிக்கவர்களும் மற்றவர்களும் அத்வைதத்தின் புகைப்படகரான சூஃபிஸியத்தையே உண்மை இஸ்லாமிய இறைகொள்கை என்று நம்புகின்றனர். இதைவிட இறையருளிய ஓரிறைக் கொள்கைக்கு அளிக்கப்படும் அநீதி வேரெதும் இருக்க முடியுமா?

தமிழில் ஈடுபாடுடைய முஸ்லிம்கள் அல்லாதவர்கள் முஸ்லிம் புலவர்களின் இறைக்கொள்கைக்கும் தங்கள் கடவுட் கொள்கைக்கும் அவ்வளவாக பெரிய வேறுபாடுகள் எதுவும் இல்லை என்பதறிந்து அந்த முஸ்லிம் புலவர்களையெல்லாம் கோயில் கட்டி கும்மிடாத குறையாக கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இது ஒருபுறமிருக்க, அந்த முஸ்லிம் புலவர்களின் சமாதிகளை முஸ்லிம்களோடு முஸ்லிம்கள் அல்லாதோரும் வணங்கி வருகின்றனர். தமிழ் முஸ்லிம் புலவர்களின் தமிழ்திறனையும் மெச்சோ மெச்சென்று மெச்சிக் கொள்கிறார்கள்.

தமிழ் தொண்டு என்ற பெயரில் தமிழரின் கடவுள் சித்தாந்தத்தை பூங்காய்கச் குற்குல மாறுதல்களுடன் அப்பட்டமாய் அப்படியே சூஃபியிஸமாக்கிக் கொள்வது இறையருளிய ஓரிறைக்கொள்கைக்கு எதிரானதன்றோ! அதனால்தான், சூஃபியிஸம் கடும் கண்டனத்திற்கும், விமர்சனத்திற்கும் உள்ளாக்கப்ப டுகிறது. முஸ்லிம் தமிழ்த் தொண்டர்களே! முஸ்லிம் தமிழ் ஆர்வலர்களே! மனித கற்பனைக்கு மனித அறிவிற்கு மனித உணர்விற்கு அப்பாற்பட்ட ஏக வல்ல இறைவனைப் பற்றி மனிதர்கள் கற்பிப்பது இறைக்கோட்பாடு போன்ற தோற்றமளிக்கலாம். ஆனால் உண்மையில் அவைகள் கோட்பாடுகள் அல்ல. வழிகேடுகளே! உருவாக்கியவர்களே மட்டுமின்றி ஏற்போரையும், எடுத்து நடப்போரையும் வழிகேட்டின் விளிம்பிற்கே கொண்டு சென்று விடும்.

அதனால்தான் இஸ்லாமிய இறையியலில் மனித குறுக்கீடுகள் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன. அதையும் மீறி ஷைத்தான்களாம், மற்ற படைப்பினங்களாம் இறைக்கொள்கை சீண்டப்படும் போது அதற்கு அந்த ஏக வல்ல இறைவனே தனது நபிமார்கள் மூலம் பதிலடி கொடுத்துள்ளான். இறைக்கொள்கையில் குளறுபடி ஏற்படாமல் தடுக்கும் முன்னெச்செரிக்கைகளை அல்குர்ஆன் நெடுகிம் காண முடிகிறது.

இறைவன் ஒருவன் என்று முழங்குவதும், விக்ரஹ ஆராதனை புரியாமல் இருப்பதும்தான் ஓரிறைக்கொள்கை என்பது இந்திய முஸ்லிம்களின் மாபெரும் தவறான நம்பிக்கை! இஸ்லாமிய இறையி யலின் அசல் நோக்கத்தை அப்படியே அமுக்கி விட்டது. ஓரிறைக் கொள்கையில் ஏற்படும் மாறுபா டு இணைவைத்தலாய் மாற்றிவிடும் அபாயத்தையும் அல்குர்ஆன் நெடுகிம் எச்சரிக்கத் தவறவில்லை.

ஏக இறைக்கொள்கை, முஸ்லிம்கள், எண்ணத்தில், சொல்லில், நடைமுறையில் அப்படியே பிரதிபலித்துக் காட்டப்பட வேண்டும். சுருங்க கூறுமிடத்து முஸ்லிம்கள் வாழ்வு முழுவதிம் ஏகத்துவம் அப்படியே பிரதிபலிக்க வேண்டும். இன்றைய முஸ்லிம்கள் வாழ்மு ஏகத்துவத்தைப் பிரதிபலிக்கிறதா? ஒரு சில விஷயங்கள் நீங்கலாய் இறையருளிய ஓரிறைக்கொள்கையைப் பிரதி பலிப்பதாய் இல்லை. ஆகவே முஸ்லிம் தமிழ் இலக்கியவாதிகளே! முஸ்லிம் தமிழ் தொண்டர்களே! முஸ்லிம் தமிழ் ஆர்வர்களே! ஓரிறைக் கொள்கையோடு தொடர்புடைய அனைத்தையும் எந்த அளவு மனிதர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமோ அதைவிட கூடுதலாய் மேலதிக விளக்கங்களுடன் அல்குர்ஆனில் தெளிவு படுத்தியுள்ளான். மனிதர்கள் கண்ட கடவுட் சித்தாந்தங்கள் எந்த அளவு இறையருளிய ஓரிறைக்கொள்கையை மாசுபடுத்துகிறது. இதையும் அல்குர்ஆன் எடுத்துக்காட்டாமல் இல்லை. இறுதி நாள் வரை, வரும் இறுதி மனிதனும் ஓரிறைக் கொள்கை எப்படி நடைமுறை வாழ்வில் பிரதிபலிக்க வேண்டும் என்பதை இறுதி இறைவேதம் விள க்கமாகவும், தெளிவாகவும் துல்லியமாகவும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது.

முரண்படும் மனித இயல்பு முரண்பாடுகளை கோட்பாடுகளாய் சித்தரிக்க முற்பட்டாம் அவைகளின் இறுதி முடிவு குழப்பங்களே! அதனால்தான் மனிதர்கள் கடவுட் பெயர்களாலே பிளக்கப்பட்டுள்ளனர். கடவுள் பெயரால் ஏற்றத் தாழ்வுகள் எல்லா வகை வழிகேடுகளும், ஒழுங்கினய்களும் கடவுள் பெயராலே அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. செய்தி ஊடகங்களும் இவைகளை வெளிச்சம் போடுகின்றன. மனித சமுதாய வீழ்ச்சிக்குப் பிரதான காரணம் மனிதர் கண்ட கற்பனைக் கடவுள்(கள்)தான். முன்னரே சைவ சித்தாந்தத்தைக் கற்றிருப்பதால் முஸ்லிம் தமிழ் இலக்கியவாதிகளிடம் அதன் தாக்கம் மேலோங்கியி ருக்கிறது. (தொடரும்)